**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13.04.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகளை மேம்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

வேளாண்மையில் தமிழக உழவர்கள் சந்தித்து வரும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வெ.கீதாலட்சுமி அவர்கள் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். அவ்வகையில் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு மையமும் ஒரு உழவர் உற்பத்தியார் நிறுவனத்தை தேர்ந்தெடுத்து அவற்றிற்கான தொழில்நுட்ப உதவி, சந்தை மற்றும் நிதித் தொடர்பு, புவிசார் குறியீடு பதிவு போன்ற பணிகளைச் செய்து வருகிறது. இம்முயற்சியில் இதுவரை 112 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை பல்கலைக்கழக மையங்கள் தேர்வு செய்துள்ளது. இதன் ஒரு பகுதியாக, 14 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சி ஏப்ரல் 12, 2023 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சந்திக்கும் சவால்களையும், எதிர்பார்ப்புகளையும் அறிந்துகொள்ள துணைவேந்தர், உழவர் உற்பத்தியாளர் நிறுவன இயக்குநர்களுடன் விரிவான கலந்துரையாடல் நிகழ்த்தினார். மேலும், உழவர் உற்பத்தியாளர் குழுக்களின் பொருட்களை இலாபகரமாக சந்தைப்படுத்த வியாபார குறியீடு மற்றும் சந்தைப்படுத்துதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். உழவர் உற்பத்தியாளர் நிறுவன பொருட்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடங்கவுள்ள வியாபார இணையதளத்தில் பங்கேற்க ஊக்குவித்தார்.

இயக்குநர் மற்றும் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவன இணைப்புத் திட்டத்தின் தனி அலுவலர் முனைவர். தே. சுரேஷ்குமார் அவர்கள் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். முனைவர். பி.பி.முருகன் வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்குநர் மற்றும் முனைவர். வி. பாலசுப்பிரமணி தேர்வுக் கட்டுப்பாட்டாளர் வாழ்த்துரை வழங்கினர். முனைவர். செ.வேலவன், பேராசிரியர் நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**